சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

MCOP No. 24/2024

23.04.2025

**ம.சா.1 லட்சுமி க/பெ. கைலாசம் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஊட்டி செல்வதற்காக சுற்றுலாவிற்கு யார் ஏற்பாட்டின் பேரில் சென்றேன் என்றால் என் மகன் தினேஷ் ஏற்பாடு செய்தார். மொத்தம் எத்தனை பேர் சென்றோம் என்றால் காரில் மொத்தம் 9 பேர் சென்றோம் அதில் சிறு குழந்தைகளும் 2 பேர் இருந்தார்கள். காரை ஓட்டுவதற்கு டிரைவரை என் மகன் தான் ஏற்பாடு செய்து அழைத்து சென்றார் என்றால் சரிதான். இந்த எதிர்மனுதாரருக்கு தகவல் தெரிவிக்காமல் என் மகன் இரவல் வாங்கி காரை சுற்றுலாவிற்கு கொண்டு சென்றார் என்றால் சரிதான். அந்த சமயம் கொரானா முடிந்த காலம் என்றால் சரிதான். வண்டியின் உரிமையாளரான எதிர்மனுதாரர் அந்த வாகனத்திற்கு தகுதி சான்று இல்லை என்றும் காப்பீடு இல்லை என்று தெரிவித்து என் மகனும் அவர் மாமனாரும் காரை எடுத்துசென்றுள்ளார் என்றால் சரியல்ல. அந்த விபத்தில் காரில் இருந்து 8 பேருக்கும் காயம் ஏற்பட்டது அவர்கள் யாரும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. விபத்திற்கு பின்பு அரசு மருத்துவமனையில் 2 நாட்கள் சிகிச்சை எடுத்தேன் அதன் பின்பு தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்தேன். எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்பதாலும் அது குணமடைந்துவிட்ட காரணத்தினாலும் அரசு மருத்துவமனையிலிருந்து என்னை அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அன்று இரவே சொந்த ஊருக்கு வந்துவிட்டேன் என்றும் அதன்பின்பு கிழே விழுந்த காயத்தை வைத்து தனியார் மருத்துமனையில் சிகிச்சை எடுத்து இந்த விபத்தில் ஏற்பட்டதாக கூறி சிசிக்சை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனுவிலும் மருத்துவ பில்களிலும் எவ்வளவு செலவுகளாகியுள்ளது என்பதை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துபில்களிலும் செலவுகள் குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு முன்பு நான் தையல் வேலை செய்து வந்தேன். அதை தொழிலாக செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தையல் தொழில் செய்து மாதம் ரூ. 25,000/- வருமானம் ஈட்டிவந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 70 வயதிற்குமேல் இருக்கும் என்றும் வயதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு நஷ்டஈடு தருவதாக இருந்தால் வாகனத்தின் ஓட்டுநரும் வாகனத்தை சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்த என் உறவினரும் தான் தரவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.